Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 198/2023**

**Deposition of PW.1 (LW.1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாக்கியம்மாள் | ஜாதி | : | |
| க/பெ | : | அருளானந்து | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | கரிசல்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | திண்டுக்கல் மேற்கு | வயது | : | 55/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.04.2026.

(எதிரி ஆஜர் இல்லை, பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் கரிசல்பட்டியில் குடியிருந்துகொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரி சுடலைமுத்து எனது ஊர்க்காரர். அவரை எனக்கு தெரியும். கடந்த 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் என் வீட்டில் இருந்தபோது, சுடலைமுத்து என்பவர் என் மகன் ஆரோக்கிய பிரபாகரனின் மேல் உதட்டை கடித்ததில் மேல் உதடு பிய்ந்துவிட்டது. எங்கள் ஊரில் முத்தாலம்மள் சாமியை கும்பிடும் போது சாமியை இறக்கி வைத்துவிட்டு வந்தபோது சுடலைமுத்து எனது மகனை பார்த்து என்னை கெட்ட வார்த்தையால் திட்டியதால் சண்டை வந்து அடித்துக்கொண்டு கிடந்திருக்கிறார்கள். சண்டை முடிந்த பிறகு என் மகன் என்னிடம் வந்து சுடலைமுத்து தன்னை சண்டையில் மேல் உதட்டை கடித்து காயம் ஏற்படுத்துவிட்டதாக கூறினார். என் நானும், என் மருமகனும் என் மகனை அழைத்துக்கொண்டு திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு அனுமதிக்க மறுத்துவிட்டதால் சுரேஷ்பாபு என்ற தனியார் மருத்துவரிடம் சிகிச்சைக்கு அழைத்துக்கொண்டு சென்றோம். அங்கு என் மகனுக்கு மேல் உதட்டில் அறுவை சிகிச்சை செய்தார்கள். 5 நாட்கள் உள்நோயாளியாக என் மகன் சிகிச்சையில் இருந்தார். அந்த இடத்தில் இருந்த நபர்கள் சண்டையை பார்த்ததும் சாட்சி சொல்ல பயந்து ஓடிவிட்டார்கள் என்று கூறினார்கள். வழக்கு சம்மந்தமாக கன்னிவாடி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுயைடது தான். அந்த கையொப்பத்துடன் கூடிய புகார் மனு **(அ.சா.ஆ.1/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

புகாரை யார், எங்கு வைத்து எழுதினார்கள் என்றால் கன்னிவாடியில் வைத்து போலிசார் எழுதினார்கள். சம்பவத்தை பற்றி உங்களுக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். உதட்டை கடித்து வந்த பிறகு தான் எனக்கு தெரியும். போலிசார் புகாரில் என்ன எழுதியுள்ளார்கள் என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். உங்கள் மகனை அரசு மருத்துவமனையில் சேர்க்காத விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளீர்களா என்றால் சொல்லியுள்ளேன். புகாரை எந்த தேதியில் கொடுத்தீர்கள் என்றால் சம்பவத்திற்கு அடுத்த நாள் கொடுத்தோம்.

சம்பவம் எத்தனை மணிக்கு நடந்தது என்றால் மாலை 05.00-06.00 மணி இருக்கும். திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு சென்றீர்கள் என்றால் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் அனுமதிக்காததால் நாங்கள் மீண்டும் வீட்டிற்கு வந்துவிட்டோம். எதிரி சண்டையில் உங்கள் மகனை கடித்திருந்தால் நேரடியாக காவல்நிலையத்திற்கு சென்றிருப்பீர்கள் என்றும், உங்கள் மகன் மது போதையில் கீழே விழுந்து காயத்தை ஏற்படுத்திக்கொண்டதால் தான் நீங்கள் காவல்நிலையத்திற்கு நேரடியாக செல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Typed to my direction in
open court ready over by
me and acknowledged
by him/her to be correct.

DM-Cum-JM,
Athoor

Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 198/2023**

**Deposition of PW.2 (LW.3)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெயந்த் பாபு | ஜாதி | : | |
| த/பெ | : | சவரிமுத்து | தொழில் | : | ஸ்டுடியோ வைத்துள்ளேன். |
| கிராமம் | : | தருமத்துப்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | திண்டுக்கல் மேற்கு | வயது | : | 38/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.04.2026.

(எதிரி ஆஜர் இல்லை, பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் தருமத்துப்பட்டியில் குடியிருந்துகொண்டு ஸ்டுடியோ வைத்து தொழில் செய்து வருகிறேன். எதிரி சுடலைமுத்துவை எனக்கு தெரியும். எதிரி கரிசல்பட்டியை சேர்ந்தவர். அ.சா.1 எனது மாமியார் ஆவார். இந்த வழக்கு சம்பவத்தில் காயம்பட்ட ஆரோக்கிய பிரபாகர் எனது மச்சான் ஆவார். கடந்த 3 1/2 வருடங்களுக்கு முன்பாக இரவு 08.00 மணியைபோல கரிசல்பட்டியில் உள்ள விநாயகர் கோவில் முன்பாகவும், கலையரங்கம் முன்பாகவும் என்னுடைய மச்சான் ஆரோக்கிய பிரபாகரனும், சுடலைமுத்துவும் மது போதையில் வாக்குவாதம் செய்து கொண்டிருந்தார்கள். வாக்குவாதத்தில் எதிரி கெட்ட வார்த்தையால் பேசியதால் இருவருக்கும் சண்டை வந்தது. அந்த சண்டையில் எதிரி சுடலைமுத்து என்னுடைய மச்சான் ஆரோக்கிய பிரபாகரனின் மேல் உதட்டை கடித்து துண்டாக எடுத்துவிட்டார். அந்த காயத்திற்கு சிகிச்சை எடுத்துக்கொள்வதற்காக என்னுடைய ஆம்னி வாகனத்தில் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அழைத்துக்கொண்டு சென்றபோது, அங்கு பார்க்க முடியாது என்று சொல்லி மதுரைக்கு அழைத்துக்கொண்டு செல்லுமாறு கூறினார்கள். மீண்டும் அன்று ஊருக்கு அழைத்து வந்துவிட்டோம். மறுநாள் காலையில் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். உதடு தனியாக சென்றுவிட்டதால் அரசு மருத்துவமனையில் பார்க்க முடியாது என்னு மீண்டும் கூறியதால் சுரேஷ்பாபு என்ற மருத்துவரிடம் தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சை எடுதத்கொள்வதற்காக சென்றோம். அங்கு அவருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அங்கு 5 நாட்கள் உள்நோயாளியாக ஆரோக்கியபிரபாகர் சிகிச்சை

பெற்றுக்கொண்டார். எதிரி சண்டை போடும் போது நான் பார்க்கவில்லை. என்னுடைய மச்சான் உதட்டில் ரத்தத்தோடு வரும்போது தான் அந்த இடத்தில் இருந்தவர்களும், என் மச்சானும் சொன்னதன் பேரில் நான் தெரிந்துகொண்டேன். என் மச்சானை மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டு மறுநாள் புகார் கொடுப்பதற்காக நானும், என் மாமியாரும் காவல்நிலையத்திற்கு சென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

**Sd/-Thiru.S. Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor